# 16 கமிலைச் சந்தித்தோம்

(செக்கோஸ்லோகிய நாட்டிலிருந்து நமது அதிதியாக வந்திருக்கும் டாக்டர் கமில் ஸ்வெலபில் அவர்களை சரஸ்வதி வாசகர்களும் தமிழ் மக்களும் இப்போது நன்கு அறிவார்கள். முப்பத்தியொன்று வயதே ஆன இந்த இளைஞர் கடந்த பத்து ஆண்டு காலத்துக்குள் தமிழ் மொழியைப் பயின்று, புறுநானூற்றிலிருந்து புதுமைப்பித்தன் கதைகள்வரை செக் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறார் என்றால் உண்மையிலேயே அது ஒரு அசுர சாதனைதான். எனவேதான் தமிழகம் முழுவதுமே இன்று அவரை வியந்து போற்றுகிறது. ‘‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!’’ என்ற புறநானூற்றுப் பொன்மொழியைக் கிளிப்பிள்ளை மாதிரி புலம்பிக் கொண்டு, அதே சமயம் கிணற்றுத் தவளை மாதிரி வாழ விரும்புகின்ற நம் நாட்டு பச்சைத் தமிழர்கள்போல் அல்லாது அந்தப் புறப்புலவன் பொன்மொழியை வாழ்விலே வாழ்ந்து காட்டி, நம்மோடும் நம் மொழியோடும் உறவு கொண்டாடி வந்துள்ள டாக்டர் கமில் அவர்களைச் சரஸ்வதி வாசகர்களின் சார்பாக நண்பர் ரகுநாதன் பேட்டி கண்ட விவரமே பின்வரும் கட்டுரை.)

‘‘ சரஸ்வதி வாசகர்களின் சார்பில் தங்களைப் பேட்டி காண வேண்டுமென்று நண்பர் விஜயபாஸ்கரன் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். நாளை எப்பொழுது தங்களைச் சாவகாசமாகச் சந்திக்கலாம்.?’’

‘‘ சரி ’’

‘‘நாளைக்கா? நாளைக் காலையில் ஒன்பது மணிக்குச் சில தமிழன்பர்களைச் சந்திப்பதாக வாக்களித்துள்ளேன். அவர்களைப் பத்து மணிக்குள் சந்தித்து முடித்து விடுவேன், பிறகு நாம் சந்திக்கலாமே.’’

* * *

‘‘ நண்பர் கமில் அவர்களே! தமிழகத்துக்கு வந்துள்ள உங்களை சரஸ்வதி வாசகர்களின் சார்பாக முதன் முதலில் நான் வரவேற்கிறேன் என்ற வாழ்த்துச் செய்தியுடன் பேட்டியைத் தொடங்கினேன்.

‘‘மிக்க நன்றி மிக்க மகிழ்ச்சி ’’ என்று அதற்கு நன்றி தெரிவித்தார் கமில்.

இவ்வாறு எங்கள் பேட்டி தொடங்கிற்று.



| | | |
|---|---|---|
| கேள்வி | : | சென்னைக்கு வந்திருக்கும் தங்களை, சரஸ்வதியின் சார்பில் பேட்டி கண்டு, எங்கள் வாசகர்களுக்கு உங்களிடமிருந்து சில விஷயங்களைத் தெரிந்து அறிவிக்க விரும்புகிறேன். சரிதானே'' |
| பதில் | : | நானும் உங்கள் மூலமாக, சரஸ்வதியின் வாயிலாக, தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். |
| கே | : | மிக்க நன்றி; சரி, தாங்கள் தமிழ் நாட்டுக்குள் புகுந்ததும் தங்களுக்குக் குறிப்பிடத்தக்க அதிசய உணர்ச்சி என்ன ஏற்பட்டது? |
| ப | : | அதுவா? டில்லியிலிருந்து நான் வந்த விமானம், தென்னாட்டுக்குள், தமிழ் நாட்டுக்குள் புகுந்து வந்த போது, நான் விமானத்தில் இருந்தவாறே கீழே பார்த்தேன். உயரமான கோபுரங்கள், பச்சைப்பசிய வயல் வெளிகள், பனை மரங்கள் இவற்றை யெல்லாம் பார்த்தவுடன் தமிழ் நாட்டுக்கு வந்து விட்டோம் என்பதை உணர்ந்தேன். இவற்றையெல்லாம் பற்றி தமிழ்ப் பாடல்களிலும் நூல்களிலும் படித்திருக்கிறேன். அவற்றை நேருக்கு நேராகக் காண்கிறேன் என்பதே எனக்கு ஏற்பட்ட புதுமை உணர்ச்சி. ஆனால் விமானத்தை விட்டு இறங்கியதும் எனக்கு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிசய உணர்ச்சி உங்களை விமான நிலையத்தில் நேருக்கு நேராகக் காண நேர்ந்ததுதான்! |
| கே | : | ஏன்? என்னை நீங்கள் விமான நிலையத்தில் எதிர்பார்க்க வில்லையா, என்ன? |
| ப | : | இல்லையில்லை! நாம் இருவரும் கடிதங்கள் மூலமாகவே பழகி இருக்கிறோம். இருவரும் ஒருவரை ஒருவர் புகைப்படங்கள் மூலமாகவே தெரிந்து வைத்திருந்தோம். எனவே உங்களை முதன்முதல் நேருக்கு நேராகச் சந்தித்துப் பேசிய அந்தக் கணத்தில்தான் உண்மையிலேயே நான் அதிசய உணர்ச்சி அடைந்தேன் என்று சொல்ல வேண்டும். |

கே : இனி நான் மொழிபற்றிச் சில கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். நீங்கள் சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் எய்தி, டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் தாங்கள் காணும் ஒற்றுமை, வேற்றுமைகள் என்ன?

ப : வேற்றுமைகள் நிறைய இருக்கின்றன. என்றாலும் இரண்டு மொழிகளும் பரஸ்பரம் ஒன்றால் ஒன்று வளம் அடைந்துள்ளன. தமிழிலிருந்து சமஸ்கிருதம் ஏராளமாகக் கடன் வாங்கியிருக்கிறது. அதேபோல சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் மொழியும் கடன் பெற்றிருக்கிறது. இரண்டு மொழிகளும் தனித் தனியே வளர்ந்த போதிலும் ஒன்றுக்கொன்று மிகவும் கடன்பட்டிருக்கின்றன.

கே : கடன்பட்டிருக்கிறது என்று கூறும் போது எந்தமொழி அதிகம் கடன்பட்டிருக்கிறது என்று கூற முடியுமா?

ப : அதிகம் குறைச்சல் என்று சொல்ல இடமில்லை. எந்த அளவுக்கு சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் கடன் வாங்கியிருக்கிறதோ அதே அளவுக்கு சமஸ்கிருதமும் தமிழிடமிருந்து கடன் பெற்றிருக்கிறது.

கே : இவ்விரண்டு மொழிகளுக்கும் உள்ள குறிப்பிடத்தகுந்த ஒற்றுமைகள் என்னென்ன?

ப : முக்கியமானது, இரண்டு மொழிகளும் ஒருமித்த பண்பாடு உடையவை. இவ்விரண்டு மொழிகளும் ஒரே கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றன. அழகியல், தத்துவம் இவ்விரண்டுக்கும் பொது.

கே : தங்கள் அபிப்பிராயத்தில் , இந்த இரண்டு மொழி பேசிய மக்களிடையே நிலவிய ஒற்றுமைகள் எவையெவை?

ப : சமயம், குலமுறை இரண்டுமே இந்த இரண்டு மக்களுக்கும் ஒரே மாதிரியானவை. தமிழர் சமுதாயத்திலிருந்து பல பழக்கவழக்கங்களை சமஸ்கிருதம் பேசிய மக்கள் - சமஸ்கிருதத்தின் அடிப்படையில் பிறந்த மொழிகள் பேசும் மக்கள் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக, இன்றுள்ள தெய்வ வழிபாட்டு முறையைப் பார்ப்போம். இந்தியா முழுமையும் தெய்வத்தை வழிபட ஒரே முறைதான் கைக்கொள்ளப்படுகிறது. இந்த வழிபாட்டு முறை திராவிட சமுதாயத்தின் சொத்து.

கே : தாங்கள் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் டாக்டர் பட்டம் பெற்றவர். இது தவிர கிரேக்கம், பிரெஞ்சு, ருஷ்ய, லத்தீன், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்திருக்கிறீர்கள். இந்த மொழிகளோடு ஒப்பிடும் போது தமிழ் மொழி பற்றி உங்கள் கருத்து என்ன?

ப : தமிழ்மொழி, மற்ற இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் போலல்லாமல் சில பிரத்தியேக ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. சொற்செட்டு, தெளிவு, இலக்கண அமைதி முதலியவை தமிழ் மொழிக்குள்ள தனி லட்சணங்கள். மற்றொரு முக்கியமான அம்சம் விஞ்ஞானச் சொற்களுக்குத் தமிழில் சுலபமாக வார்த்தைகள் கண்டு பிடிக்கலாம். ஏனென்றால் விஞ்ஞானச் சொற்களுக்குத் தேவையான வேர்ச் சொற்கள் தமிழில் நிறைய இருக்கின்றன.

கே : உங்கள் நாட்டின் எழுத்தாளர் நிலைபற்றியும் அறிய விரும்புகிறோம். புதிய எழுத்தாளர்களுக்கு உங்கள் நாட்டில் எவ்வித வரவேற்பு கிடைக்கிறது?

ப : எழுத்தாளர்களில் புதியவர், பழையவர் என்ற பாகுபாடே நாங்கள் பார்ப்பதில்லை. எழுதுபவர் எவராக இருந்தாலும் அவர் எழுத்து பிரசுரிக்க லாயக்கானதாக இருந்தால் நிச்சயம் பிரசுரிக்கப்படும். புகழ் வாய்ந்த எழுத்தாளருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப் படுகிறதோ அதே அளவு பணம் ஆரம்ப எழுத்தாளர்களுக்கும் கொடுக்கப்படும். வாசகர்களும் விமர்சர்களும் அவரது சிருஷ்டிகளைச் சிறப்பாக வரவேற்றால் அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. ஒருவர் எழுத்தாளர் ஸ்தானத்தை அடைந்ததும் செக்கோஸ்லோவேகிய எழுத்தாளர் சங்கத்தில் அவர் அங்கத்தினராகச் சேரலாம். அங்கு மற்றவர்கள் பெறும் சகல வசதிகளையும் அவரும் பெறுவார்.

கே : வசதிகள் என்றால் என்னென்ன?

ப : எங்கள் எழுத்தாளர் சங்கம் எழுத்தாளரின் சகல உரிமைகளையும் பாதுகாக்கும். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு தனிப்பட்ட எழுத்தாளரின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளது. அங்கத்தினர் ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரது வைத்தியத்துக்கான சகல வசதிகளையும் சங்கம் செய்து தருகிறது. அந்த எழுத்தாளர் ஓய்வு பெறுவதற்காக அவரை சுக வாசஸ்தலங்களுக்கு அனுப்பி வைக்கிறது. சங்கத்திற்கென்று ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. அதற்கு டோப்ரீஸ் மாளிகை என்று பெயர். அங்கே எழுத்தாளர்கள் கூடி விவாதிப்பார்கள். உல்லாசமாகப் பொழுது போக்கவும் செய்வார்கள்.

கே : எழுத்தாளர் புதிய புதிய முயற்சியில் ஈடுபட சங்கம் உதவி செய்யுமா?

ப : நிச்சயமாக. புதிய விஷயங்களைச் சேகரிக்க முற்படும் எழுத்தாளர்களின் பிரயாணங்களுக்குச் சங்கம் வசதி செய்து தருகிறது. எழுத்தையே தொழிலாகக் கொண்டிருப்பவர்களுக்கு

அவர்கள் தங்கள் முயற்சியில் செம்மையாக ஈடுபடுவதற்காகச் செலவாகும் தொகையைக் கடனாகக் கொடுத்து உதவுகிறது. எமது எழுத்தாளர் ஸ்தாபனத்தில் கலை, இலக்கியம், விஞ்ஞானம் முதலிய சகல துறைகளுக்கும் தனித்தனிப் பகுதிகள் இருக்கின்றன. எழுத்தாளர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவ்வப்பகுதியில் கூடித் தங்கள் தங்கள் பொதுப் பிரச்சினைகளை விவாதிக்கலாம்.

கே : உங்கள் சங்கத்தில் மொழிபெயர்ப்பாளர்களும் நிறைய இருக்கின்றார்களா?

ப : ஆம், மொழிபெயர்ப்பாளர்கள் மிகவும் முக்கியமானவர்கள் என்பது எங்கள் கருத்து. உலகத்தின் மகத்தான இலக்கியச் செல்வங்களை எல்லாம் எங்கள் மக்களுக்கு வாரி வழங்குபவர்கள் இவர்கள்தானே. எமது எழுத்தாளர் ஸ்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளருக்கென்று ஒரு தனிப்பகுதியே உண்டு. நானும் இப்பகுதியின் ஒர் அங்கத்தினர்.

கே : எழுத்தாளருக்கு ஸ்தாபனம் இருப்பது போல வாசகர்களுக் கென்று ஸ்தாபனம் ஏதாவது உண்டா?

ப : உண்டு, அந்த ஸ்தாபனங்களின் முக்கியமான பணிகளில் ஒன்று, எங்கள் நாட்டில் மாதாமாதம் வெளியாகும் புத்தகங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து இந்த ஸ்தாபனங்கள் தனிப் பதிப்பாக வெளியிடும். வாசகர் சங்க அங்கத்தினர்களுக்கு இப்புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும். அங்கத்தினர் அனைவரும் கட்டாயம் இந்தப் புத்தகங்களை வாங்க வேண்டும். ஒவ்வொரு வாசகர் சங்கமும் ஆண்டு ஒன்றுக்கு பத்துப் பன்னிரண்டு புத்தகங்களை வெளியிடும்.

கே : புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

ப : பிரசுராலயங்களில் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்றே பல அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சர்வகலாசாலைகளில் இலக்கியத் துறையில் பட்டம் பெற்றவர்கள். கவிதை, நாவல் சிறுகதை ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இலாகா இருக்கிறது. எழுத்தாளர் சம்பந்தப்பட்ட இலாகாவில் தனது கையெழுத்துப் பிரதியைக் கொடுப்பார். அவரது நூல் பரிசீலிக்கப்பட்ட பின் பிரசுரிக்க ஏற்றது என்று கொள்ளப்பட்டால் பிரசுராலயம் அந்த எழுத்தாளருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு புத்தகத்தை வெளியிடும். திருத்த வேண்டுமென்று கருதினால் சம்பந்தப்பட்ட எழுத்தாளரிடம் கொடுத்து திருத்தச் சொல்லுவார்கள்.

கே : பிரசுரகர்த்தர்கள் திருத்தங்களில் தலையிடமாட்டார்களே!

ப : அவ்விதம் திருத்தமாட்டார்கள்.

கே : நல்ல நூலாக இருந்தும், ஒரு வேளை பிரசுராலயம் பிரசுரிக்க மறுத்தால் எழுத்தாளர் என்ன செய்வார்?

ப : எழுத்தாளர் சங்கத்தில் தனது கையெழுத்துப் பிரதியைச் சமர்ப்பித்து நியாயம் கோரலாம். சங்கம் பிரசுரகர்த்தருடன் போராடிப் புத்தகத்தை வெளியிடச் செய்யும்.

கே : பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களுக்கு 'ராயல்டி' கொடுக்கப்படுமா? அல்லது கையெழுத்துப் பிரதியையே பிரசுரகர்த்தர்கள் மொத்த விலைக்கு வாங்கிக்கொள்ளும் வழக்கம் உண்டா?

ப : எழுத்துக்கு விலை என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. 'ராயல்டி' தான் கொடுக்கப்படும். ஒப்பந்தமானவுடன் மூன்றில் ஒரு பங்கு 'ராயல்டியை ' உடனடியாகக் கொடுத்து விடுவார்கள். புத்தகம் வெளியானதும் மீதிப் பணம் முழுவதையும் எழுத்தாளர் பெறுவார். இது சட்டத்தின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்ட முறையாகும்.

கே : புதிய எழுத்தாளருக்கு குறைந்த 'ராயல்டி' விகிதம் இருக்கிறதா?

ப : ஏன், குறைத்துக் கொடுக்க வேண்டும்? எல்லோருக்கும் ஒரே விகிதத்தில்தான் 'ராயல்டி' கிடைக்கும். அச்சடிக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கையில்தான் வித்தியாசம் இருக்கும். புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்கள் அதிகப் பிரதிகள் வெளியிடப்படும்.

கே : எழுத்தாளர்கள் காலமான பின் 'ராயல்டி' யாருக்குக் கிடைக்கும்?

ப : எழுத்தாளரின் குடும்பத்துக்கு.

கே : உங்கள் எழுத்தாளர் சங்கம் லட்சிய அடிப்படையிலே நிறுவப்பட்டிருக்கிறதா அல்லது தொழில் முறையிலா?

ப : தொழில் முறையில்தான்.

கே : ஒரே மாதிரியான கொள்கை ரீதியிலிருந்து மாறுபட்ட பல்வேறு கருத்துடைய எழுத்தாளர்களின் நூல்களும் உங்கள் நாட்டில் பிரசுரமாகின்றனவா?

ப : ஆம், உதாரணமாக, தூரிஷ் என்ற எழுத்தாளர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். இவரது லட்சியம் மற்ற எழுத்தாளர்களின் லட்சியத்திற்கு மாறுபட்டது. என்றாலும்கூட இவரது இரண்டு புத்தகங்கள் சமீபத்தில் வெளியாயின.

கே : உங்கள் நாட்டில் உயிருடன் உள்ள புகழ் பெற்ற கவிஞர்கள் யார், யார்?

ப : ஷைபர்ட்தான் முதலாவது ஸ்தானத்தை விகிக்கிறார். இவர் ஒரு மக்கள் கவிஞர். அடுத்தபடியாகக் குறிப்பிடத் தகுந்தவர் நெஜ்வெல். இவரது கவிதைகள் அரசியல் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கும். மூன்றாவது ஹ்ருபீன். இவரது கவிதைகளில் அழகிய வர்ணனைகள் பிரதான பாகம் வகிக்கிறது. இவர் காவியம் இயற்றுவதில் வல்லவர். காளிதாஸனின் சாகுந்தலத்தை இவர் கவிதை உருவில் செக்மொழியில் வெளியிட்டிருக்கிறார். இது நாடகமாகவும் எங்கள் நாட்டில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

கே : தமிழ் நாடகங்கள் ஏதாவது உங்கள் நாட்டில் அரங்கேற்றப் பட்டிருக்கின்றனவா?

ப : புதுமைப்பித்தனின் 'வாக்கும் வக்கும்' என்ற நாடகம் விரைவில் அரங்கேற்றப்பட இருக்கிறது. நாடகங்களுக்கு எப்பொழுதுமே நல்ல வரவேற்பு உண்டு. பல சமயங்களில் நாடகங்களுக்கு 'டிக்கட்' கிடைப்பதே கஷ்டம்.

கே : சினிமாவால் நாடகம் பாதிக்கப்படவில்லையா?

ப : இல்லை.

கே : உங்கள் நாட்டில் அரசாங்கம் கலைஞர்களுக்குப் பரிசுகளும் விருதுகளும் வழங்குவது உண்டா?

ப : ஆம்; உண்டு. 'தேசிய கலைஞர்' 'என்பதுதான் உயர்ந்த விருது. இந்த விருது பெறுபவர்களுக்கு அத்துடன் ஒரு பெரிய தொகை பரிசாகக் கிடைக்கும், அதுதவிர, ஆண்டுதோறும் உபகாரச் சம்பளமும் உண்டு. அடுத்தது, ஆஸ்தானக் கலைஞர் என்ற பட்டம். இந்தப் பட்டம் பெறுபவர்க்கும் பெரிய தொகை ஒன்று பரிசாகக் கிடைக்கும். ஆனால் ஆண்டு தோறும் உபகாரச் சம்பளம் கிடைக்காது. எங்கள் கீழைநாட்டுக் கல்லூரியின் தலைவர் 'ப்ருஷெக்,' சீன இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதிய ஆராய்ச்சி நூலுக்காக இந்தப் பட்டம் பெற்றிருக்கிறார்.

கே : நாவல், கவிதை, சிறுகதை இவைகளில் எது உங்கள் நாட்டில் அதிகம் விற்பனையாகிறது?

ப : கவிதைகள். அடுத்தது நாவல். மூன்றாவதுதான் சிறுகதைகள் .

கே : பத்திரிகைகளில் தொடர் கதைகள் வெளியாகின்றனவா? வாசர்கள் விரும்பிப் படிக்கிறார்களா?

ப : தொடர் கதைகளை மக்கள் விரும்பிப் படிக்க மாட்டார்கள்.

ஏனென்றால் எங்கள் நாட்டில் புத்தகம் வாங்கும் பழக்கம் மக்களிடம் அதிகம். ஒவ்வொருவரும் தனக்கென்று வீட்டில் ஒரு நூல் நிலையம் இருக்க வேண்டுமென விரும்புவர். புத்தகங்களை எல்லோரும் வாங்க முடியும். அதனால் வருஷக் கணக்காகக் காத்திருந்து ஒரு நாவலைத் தொடர் கதையாகப் படிக்க எவரும் விரும்புவதில்லை.

கே : எங்கள் வாசகர்கள் சார்பாக இன்னும் எவ்வளவோ கேட்டுத் தெரிந்து கொள்ள ஆவல். எனினும் தாங்கள் ஏற்கெனவே களைத்துப்போய் இருக்கிறீர்கள். எனவே இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன். கடைசியாக சரஸ்வதி வாசகர்களுக்குத் தங்கள் நல்லுரை என்ன?

ப : 'சரஸ்வதி' வாசகர்களுக்கு என் அன்பார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'சரஸ்வதியின்' ஆசிரியருக்கும் பத்திரிகையை வெளியிடுவதில் அவருடன் ஒத்துழைக்கும் அவரது நண்பர்கள் அனைவருக்கும் வாசகர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். காரணம், இன்று தமிழகத்தில் வெளியாகும் இலக்கியப் பத்திரிகைகளிலேயே சரஸ்வதி தலை சிறந்தது என்பது மட்டுமல்லாமல் உண்மையாகச் சொல்லப் போனால் இது ஒன்றுதான் நல்ல பத்திரிகை. வாசகர்கள் எழுத்தாளர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். தங்கள் விமர்சனங்களின் மூலம் எழுத்தாளர்களை ஊக்குவித்து முன்னேறச் செய்ய வேண்டும். நாடோடி இலக்கியங்களைச் சேகரிப்பதில் உங்கள் வாசகர்கள் நன்கு உதவமுடியும். சரஸ்வதி வாசகர்களை உங்கள் மூலம் சந்திக்க வாய்ப்பளித்ததற்கு உங்களுக்கு என் நன்றி.

கே : சிரமத்தைப் பாராது நீங்கள் இவ்வளவு நேரம் பதிலளித்ததற்கு வாசகர்கள் சார்பாக நாங்களும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இத்துடன் எங்கள் பேட்டி முடிவடைந்தது.

**( பேட்டியின் ஒரு பகுதி)**

## கிரகித்தற் பயிற்சி

1. எந்தப் பத்திரிகையின் வாசகர்கள் சார்பில் பேட்டி காணப்பட்டது?
2. பேட்டி காணப்பட்ட தமிழறிஞர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. தமிழுக்கும் சமஸ்கிருத மொழிக்கும் இடையிலான தொடர்பு பற்றி அறிஞர் யாது கூறுகிறார்?
4. பேட்டியின் போது உரையாடப்பட்ட முக்கிய கருத்துக்கள் மூன்றினை தனித்தனி வாக்கியங்களில் எழுதுங்கள்.

5. டாக்டர் கமில் ஸ்வெலபிலின் மொழிப் பாண்டித்தியம் பற்றி எழுதுக.
6. செக்கோஸ்லேவியா நாட்டு அரசாங்கம் எழுத்தாளர்களுக்கு வழங்குகின்ற இரு விருதுகளைக் குறிப்பிடுக.
7. செக்கோஸ்லேவியா மொழியில் புகழ்பெற்ற கவிஞர்கள் சிலரது பெயர்களைக் குறிப்பிடுக.
8. சரஸ்வதி பத்திரிகை பற்றி டாக்டர் கமில்ஸ்வெலபில் வெளியிட்ட கருத்தினைத் தருக.
9 'வாக்கும் வக்கும்' என்ற சிறுகதையை எழுதிய தமிழ் நாட்டுச் சிறுகதையாசிரியர் யார்?
10. பேட்டியை சுவாரசியமாக அதனை உயிரோட்டமாக நடத்துவதற்கு பேட்டி கண்டவர் கையாண்ட உத்திகள் யாவை?
11. ஒரு பேட்டி சிறந்த முறையில் அமைவதற்கு உகந்த வழிமுறைகளை விளக்குக.
12. இப் பேட்டியின் நோக்கம் யாது? அந் நோக்கம் வெற்றியளித்துள்ளதா?

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. (அ) உமது பிரதேசத்தில் உள்ள ஓர் எழுத்தாளனை பேட்டி கண்டு அதனை எழுதுங்கள்.

**அல்லது**

(ஆ) உமக்கு பிடித்த பிரபல எழுத்தாளர் ஒருவரை பேட்டி காண்பது போல கற்பனை செய்து ஒரு பேட்டி எழுதுங்கள்.

2 உங்கள் பாடசாலை ஆசிரியர் ஒருவரைப் பேட்டி கண்டு எழுதுங்கள்.

## இலக்கணம்

### வழுவும் வழாநிலையும் வழுவமைதியும்

வழுக்களை எழுத்து வழு, சொல் வழு, வழக்கு வழு, புணர்ச்சி வழு, வாக்கிய வழு என வகைப்படுத்தலாம். வழுக்களையும் வழா நிலைகளையும் மட்டுமன்றி, சான்றோர் காட்டிய வழுவமைதிகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

இலக்கண விதிகளுக்கு அமையாதது - வழு
இலக்கண விதிகளுக்கு அமைந்தது - வழாநிலை
இலக்கண விதிக்கு அமையாவிடினும் சான்றோர் வழக்கில் பெரிதும் பயின்று வந்ததால் வழுவற்றதென அமைத்துக் கொண்டது - வழுவமைதி

**01. எழுத்து வழு**

| வழு | வழாநிலை |
|---|---|
| பரீட்ச்சை | பரீட்சை |
| நுட்ப்பம் | நுட்பம் |

**02. சொல் வழு**

| | |
|---|---|
| அருவாள் | அரிவாள் |
| இளனி | இளநீர் |

**03. வழக்கு வழு**

சமுகம்
சமூகம்
} வாக்கியங்களில் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக பிரயோகிக்க வேண்டும்

**04. புணர்ச்சி வழு**

| | |
|---|---|
| தமிழ்சங்கம் | தமிழ்ச்சங்கம் |
| இயற்கைகாட்சி | இயற்கைக்காட்சி |

வாக்கிய வழுக்களை திணை, பால், எண், இட, கால, மரபு, வினா, விடை வழுக்களாக இனங்காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அவன் வந்தது | - | திணை வழு |
| | அவன் வந்தான் | - | வழா நிலை |
| 2. | அவன் வந்தாள் | - | பால் வழு |
| | அவள் வந்தாள் | - | வழா நிலை |
| 3. | அவன் வந்தேன் | - | இடவழு |
| | அவன் வந்தான் | - | வழா நிலை |
| 4.. | நேற்று வருவேன் | - | கால வழு |
| | நேற்று வந்தேன் | - | வழா நிலை |
| 5. | சேவல் எத்தனை முட்டை இட்டது? | - | வினா / பொருள் வழு |
| | கோழி எத்தனை முட்டை இட்டது? | - | வழா நிலை |
| 6. | கல்லூரியில் இடம் கிடைத்து விட்டதா<br>என் மகளுக்கு திருமணம் ஆயிற்று | } | வினா விடை வழு |
| 7. | யானை இடையன் எங்கே | - | மரபு வழு |
| | யானைப் பாகன் எங்கே | - | வழா நிலை |

**வழுவமைதி**

மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு, எனும் காரணங்களால் இலக்கண வரம்பினை மீறி மக்கள் பேசும் பேச்சுமரபாக வழங்கி வரும் நிலையில் வழுவாக இருந்தாலும் அவற்றிற்கு அமைதி ( காரணம் ) கூறி இலக்கணமாக ஏற்றுக் கொள்ளும் நிலை வழுவமைதி எனப்படும்.

**உதாரணம் :-**

1. பசுங்கிளியார் தூது சென்றார் ( அஃறிணை உயர்திணையாகச் சொல்லப்பட்டுள்ளது.)

2. பயனற்ற சொற்களை சொல்லும் ஒருவனைப் பார்த்து: “ இந்நாய் குரைக்கிறது.” - (கோபம் காரணமாக உயர்திணை அஃறிணையாகச் சொல்லப்பட்டுள்ளது.)

3. இரண்டு கண்ணும் சிவந்தது.
(பன்மையில் ஒருமை சொல்லப்பட்டுள்ளது)

4. வீரம் இல்லாத கோழையை நோக்கி இவன் பெண்
(இழிவு காரணமாக ஆண்பால் பெண்பாலாக வந்துள்ளது.)

5. வெயிலெல்லாம் மறைத்தது மேகம்
(வெயில் என்ற ஒருமையுடன் பன்மையைசேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது).

6. “ செங்குட்டுவன் நினைத்தால் நடக்காதது எதுவுமில்லை ” என்றான் செங்குட்டுவன்
(நான் என்ற தன்மையில் கூற வேண்டியது படர்க்கையில் கூறப்பட்டுள்ளது.)

7. தெய்வம் இருக்கிறது.
கடவுள் கொடுப்பார்
(மூன்று காலத்திற்கும் உள்ளது ஒரு காலத்திற்குச் சொல்லப்பட்டுள்ளது)

8. என் வயிறு பற்றி எரிகிறது. - மரபு
இவ்வழி அவ்வூருக்கு போகாது - மரபு

9. மூர்க்கனும், முதலையும் கொண்டது விடா
(இரண்டு திணைகளுக்கும் பொதுவாக அஃறிணைக்குரிய வினை இழிவு கருதிச் (விடா) சொல்லப்பட்டுள்ளது.)

10. காபி சாப்பிட்டான்
(குடித்தான் என்பதற்குப் பதிலாக சாப்பிட்டான் என்று சொல்லப்பட்டுள்ளது.)

## பயிற்சி

**(I)** பின்வரும் வழுச்சொற்களை வழாநிலைச் சொற்களாக எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அதுகள் | 2. | உடமை | 3. | கருவப்பிள்ளை |
| 4. | காச்சல் | 5. | கோர்வை | 6. | துவங்கி |
| 7. | நாத்தம் | 8. | முயற்சித்தான் | 9. | மோந்தான் |
| 10 | முயர்ச்சி | | | | |

**(II)** **பின்வரும் சொற்களின் பொருளை உணர்ந்து வாக்கியங்கள் அமையுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | குலைத்தல் / குரைத்தல் | 2. | அவசரம் / அவசியம் |
| 3. | ஏற்றுதல் / ஏத்துதல் | 4. | பேசுதல் / ஏசுதல் |
| 5. | உணர்தல் / உலர்தல் | 6. | வகுத்தல் / வகித்தல் |

**(III)** **பின்வருவனவற்றுள் இடம்பெற்றுள்ள வழுவமைதிகளைக் கூறுங்கள்.**

1. திங்களும் சான்றோரும் ஒப்பர்.
2. ஏ ! பூமாதேவியே நீதான் கேட்க வேண்டும்.
3. காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்? என்றாள்
4. இவள் ஒரு கழுதை.
5. நீ ! படிக்காவிட்டால் கெட்டாய்.
6. எங்கள் சொத்து எங்கள் பிள்ளைகளே.
7. மரம் போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்.
8. மலை நிற்கின்றது.

**(IV)** **பின்வரும் வாக்கியங்களிலுள்ள வழுக்களை இனங்கண்டு திருத்தி எழுதுங்கள்.**

1. இங்கு பல்வேறு வகைப்பட்ட பறவைகளும் எல்லா மிருகங்களையும் காணலாம்
2. நான் நினைத்தேன் மழையினால் மரங்களில் ஏற்படும் சத்தம் என்று நினைத்தேன்.
3. எமது குடும்பத்தாருடன் நான் ஓர் தலயாத்திரையாகச் சிவனொலிபாத மலைக்கும் சென்றோம்.
4. பயந்துபோய் தனக்குக் கடிக்கவந்த நாய்க்குக் காலை வெட்டினார்.
5. ஒவ்வொரு மாணாக்கர்களும் பொறுப்புணர்ச்சியுடன் நடக்க வேண்டும்.
6. இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்
7. யானைகள் கூட்டமாய் அடர்ந்த அந்தக் காட்டில் நிற்கின்றது.
8. அவர்களை அடிமைகள் என்றும் திருந்த மாட்டார்கள் என்றும் உயர்ந்த உணர்ச்சிகள் இல்லை என்றும் எண்ணுகிறார்கள்.